## பயணிகளுக்கு புதிய சேவை:

# மெட்ரோ ரெயில் நிலையத்தில் ரூ.10–க்கு வாடகை கார் வசதி!

சென்னை, ஆக 7

சென்னையில் உள்ள மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து பயணிகள் சென்று வர ரூ.10 கட்டணத்தில் வாடகை கார் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில் பயணிகளுக்கு சிறந்த சேவை வழங்கும்விதமாகமெட்ரோ ரெயில் நிர்வாகம் பல்வேறு வசதிகளைமேம்படுத்திவருகிறது. இந்நிலையில்பயணிகளை கவரும் விதமாக மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து 6 முதல் 8 கி.மீ தூரத்தில் வசிப்பவர்கள் சென்று வர வாடகை கார் (கேப்) வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த வாடகை கார் வசதியை தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் நந்தனம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். மெட்ரோ ரெயில் நிர்வாகமும் பெங்களூர்தனியார்நிறுவனமும்இணைந்து இந்த வாடகை கார் சேவையை பயணிகளுக்கு வழங்குகிறது. இந்த கார்கள் மின்சார பேட்டரி மூலம் இயங்கக் கூடியது. ஓலா, உபர் போலவே பயணிகள் தங்கள் செல்போன் செயலிகள் மூலம் இந்த கார்களில் பயணிக்கமுன்பதிவுசெய்யலாம். ரூ.10 கட்டணத்தில் இந்த சேவை வழங்கப்பட இருப்பதாக கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மெட்ரோ ரெயில் நிலைய பகுதிகளிலும் 5 நிறுத்தங்களில் இருந்து பயணிகள் ஏறிச் செல்லலாம். அடுத்த 3 மாதங்களில் சென்னையில் உள்ள அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் இந்த வாடகை கார் சேவைவிரிவுபடுத்தப்படும் என்று அதிகாரிகள் கூறினர்.

கடந்த 2018ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சோதனை முயற்சியாக வாடகை கார் சேவைதொடங்கப்பட்டது. அதில் 3 கி.மீ சுற்றுப் பகுதிகளுக்கு மட்டும் கார் சேவை வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம்ஐ.டி.ஊழியர்களுக்கு உதவும் விதமாக ஆலந்தூர் மெட்ரோ நிலையத்தில் சேவை விரிவுபடுத்தப்பட்டது. காலை 6.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை பயணிகள் மெட்ரோ வாடகை கார் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம். ஏற்கனவே மெட்ரோ போக்குவரத்துக் கழகம் மினி பேருந்துகளை இயக்கி வருவது குறிப்பிடத்தக்கது.



மெட்ரோ ரெயில் நிலையத்தில் பயணிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வாடகை கார்.